# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 47 - 2023*

**கல்வி – 25.11.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**கலைவகுப்புகள் - 25.11.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**அரையாண்டுத் தேர்வு 2023.**

**அரையாண்டுத் தேர்வு 2023 இற்கான எழுத்துத் தேர்வு 09.12.2023 நடைபெறும்.**

அதற்கான புலன்மொழித்தேர்வுகளை நடாத்தும் பணியிலும் இத் தேர்வுகளுக்கான தயார்படுத்தலிலும் ஆசிரியர்கள் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர். அனைத்துப் பெற்றோரும் ஆசிரியர்கள் தரும் தகவல்களுக்கு ஏற்றவாறு பிள்ளைகளைத் தயார்படுத்தவும்.

**நத்தார் விழா 2023**

நத்தார் விழா 16.12.2023 - இதற்குப் பொறுப்பானவர்கள் 1ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் வகுப்புப் பெற்றோர்கள். இவர்களுக்கான தகவல்கள் விரைவில் வகுப்புப் பிரதிநிதிகளினூடாக வழங்கப்படும். நிகழ்வுக்கான அழைப்பிதழ் மற்றும் நிகழச்சிநிரல்கள் அடுத்தவாரம் அனுப்பிவைக்கப்படும்.

**புதிய நிருவாக உறுப்பினர்கள் சந்திப்பு 18.11.2023**

18.11.2023 அன்று நிர்வாக பொறுப்பு பகிர்வுக் கூட்டம் நடைபெற்றது. நேர்த்தியாகவும் சிறப்பாகவும் தெரிவு நடைபெற்று. யார் யாருக்கு என்ன பொறுப்பு என்று நத்தார் விழாவில் அறிமுகம் செய்யப்படும்.

**பெற்றோருக்கான தெளிவுபடுத்தல்!**

18.11.2023 அன்று தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (TCC) சார்பாக ஒருவர் எந்தவித முன் அறித்தலும், ஒப்புதலும் இன்றி எமது வளாகத்திற்கு வந்து அங்கே கூடி இருந்த எமது வளாக பெற்றோரிடம் மாவீர் நாள் நிகழ்வுக்காக நிதிசேகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, பெற்றோரில் சிலர் நிர்வாகத்திற்குத் தகவல் தர. நிர்வாகம் நேரடியாக சம்மந்தப்பட்டவரிடம் பெற்றோர் முன்னிலையில், தமிழ்முரசம் வானொலியில் TCC உறுப்பினரால் எம்மால்

தெரிவிக்கப்படாதா விடயத்தை, நாம் தெரிவித்ததாகக் கூறி உண்மைக்கு புறம்பாகப் பரப்பிய பரப்புரையை மறுத்து அறிக்கை ஒன்று விட்டிருதோம்.

அதையும் இங்கே இணைக்கின்றோம்.

இதற்குத் தாங்கள் இன்னும் எந்தவித பொறுப்பும் ஏற்கவில்லை. அத்துடன் எமது வளாகப் பெற்றோரிடம் நிதி சேகரிக்க முற்பட்டுள்ளீர்கள் இதனைப்பற்றி நிர்வாகத்தில் எந்த அறிவித்தலும் தரவில்லை. நிர்வாகம் சார்பாக அதை தடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வளாகத்தில் எந்தவொரு விடயம் நடைபெறுவதாக இருந்தாலும் நிர்வாகத்திற்கு அறிவித்தலின்றி அல்லது நிர்வாகத்தின் ஒப்புதலின்றி நடைபெறுவது முறையல்ல.

இருப்பினும் எமது ஈழமீட்புப் போராட்டத்தில் தம் இன்னுயிர்களை எமக்காக ஈன்ற மாவிரர்களை நினைவுகூரும் நாள் நிகழ்வுக்காகச் சேகரிக்கப்படும் நிதி என்பதனைக் கருத்திற்கொண்டு வளாக நிர்வாகமும் பெற்றோரும் இணைந்து நிதிசேகரிக்க வழிவகுத்தோம். நிதிசேகரிப்பதைத் தவிர வேறு எந்த விடயங்களப் பற்றியும் கலந்துரையாட ஒப்புதல் வழங்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவீரீகள் என்றும் பூசிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களை நாம் இவ்வேளை நினைவுகூருவோம்.

**மாவீரர்நாள் நிகழ்வு மண்டபத்திற்கான பிரயாண ஒழுங்குகள் 2023 இணைக்கப்பட்டுள்ளது.**

**மழலையர் முற்றம்**

நாள் : ஞாயிற்றுக்கிழமை 03.12.2023

இடம் : Nedre Rommen 3, 0988 Olso

நேரம் : 13.00

**தேநீர்ச்சாலை -** இயங்குநிலையில் இருக்கும்.

***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***
தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## தைப்பொங்கல் விழா 2024 (13.01.2024)

அன்னை பூபதி தமிழ்க் கல்விக்கூடங்கள் மற்றும் தமிழர் வள ஆலோசனை மையம் இணைந்து நடாத்தும் தைப்பொங்கல் விழா. இணைப்பைப் பார்க்கவும்!

## நிதி 2023

**வாரம் 45 முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 vår 2023 இற்குரிய கட்டணவிபரணங்கள் அனுப்பப்பட்டுள்ளது. கவனத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள முடிவுத் திகதிக்குள் /விரைவாகச் செலுத்தினால் நன்று.**

**நிலுவையிலுள்ள பழைய (høst 2022) கட்டணங்களை விரைவாகச் செலுத்தவும். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.**

முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 கட்டண அறவீட்டுத் தகவல் இன்னும் கிடைக்காதவர்கள் நிதிப்பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளவும்.

இந்த கல்வியாண்டு 2023-2024 høst 2023 கட்டண விபரம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம். ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.
jude@annai.no

## முக்கிய கவனம்!!

1. *மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
2. *கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.*
3. *பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில்* ***(brannalarm)****, அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* ***(brannbil, ambulanse osv)*** *வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.*
   *வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.*
   *பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.*
   *எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* ***(brannbil,politibil, ambulanse osv)*** *நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!*

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!